ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2146/12 - 2019 ඔක්තෝබර් මස 21 වැනි සඳුදා - 2019.10.21

*2146/12 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

திருத்தம்

**கௌரவ சேவைப் பதக்கம்**

கட்டளை

*2019, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதிய, 2112/32 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கௌரவ சேவைப் பதக்கத்திற்கான ஒழுங்குவிதிகளின் முதலாவது, இரண்டாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது பந்திகளை அகற்றி கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள படி திருத்தம் செய்யப்படுகின்றது.*

***இரண்டாவது பந்தி*** - *விபரம் - உலோக தங்கரோஜா நிறத்தில் ஒரு பக்கத்தில் 3.7 செமீ விட்டத்துடன் எட்டு இதழ்களைக் கொண்டு ஒரு தாமரை மலர் வடிவத்திற்கமைய உருவாக்கப்பட வேண்டிய இப்பதக்கத்தின் முன்பக்கத்தில் நடுவில் குறுக்காக வைக்கப்பட்ட இரண்டு வாள் சின்னத்துடனும் மேல் நங்கூரமிட்டு அதில் சூழ சங்கிலியும் மேல் தலை இடது பக்கத்தின் திருப்பிய பறக்கும் கழுகும், சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளால் "சேவாபிமானீ பதக்கம்" என்றும் எழுதப்பட வேண்டும். பின் பக்கத்தில் தாமரை இதழில் கரையால் சூழப்பட்ட இலங்கை புராணக் கதைகளால் நிரூபிக்கப்பட்ட சிங்கத்தின் ரூபமும் நெற்கதிர்களுடன் மற்றும் சிறந்த தர்மசக்கரமும் அடியில் நிறைகுடமும் வலது பக்கத்தில் தொடர் வீசும் சூரியனும் இடது பக்கத்தில் சந்திரனும் உள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சின்னனத்தையும், அதன் கீழ் தயாரிக்கப்பட்ட வருடமாக 2009 ஐயும் வரையப்பட வேண்டும்.*

***நான்காவது பந்தி*** - *தகுதி 2019.05.19 ஆம் திகதியிலிருந்து போருக்குப் பின்னரான செயற்பாடுகளுக்காக சேவை வழங்கிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்புச் செயலாளருக்கு மற்றும் முதற் பயிற்சிக் காலம் தவிர ஆறு வருடங்களுக்கு குறைந்த கணிப்பீட்டுச்*

சேவை உள்ள நற்குணம் உள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இராணுவம், கடற்படை, விமானப்படைகளின் நிரந்தர மற்றும் தொண்டர் படைகளின் ஏனைய பதவிகளுக்கும், இலங்கை பொலிஸ் அங்கத்தவர்களுக்கும் ஆயுதந் தாங்கிய படைகள் மற்றும் இலங்கை பொலிசுடன் இணைந்த நிறுவனங்களில் மூன்று வருட கூட்டுமொத்த சேவைக் காலத்தைக் கொண்ட நிரந்தர சிவில் ஊழியர்களுக்கும் கீழ்க் குறிப்பிடப்படும் சட்ட திட்டங்களின் கீழ் இந்தப் பதக்கம் வழங்கப்பட முடியுமென இத்தால் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஐந்தாவது பந்தி** - பதிவு செய்தல் - அதியுத்தமராம் சனாதிபதியவர்களின் ஆணைப்படி இந்தப் பதக்கம் வழங்கப்பட்ட சகலரின் பெயர், அந்தந்த சேவை ஆணைகளினால் பிரசுரிக்கப்பட்ட வேண்டும். அந்த சேவைத்தளபதிகளின் கட்டளையின்படி அனைவரது பெயர்ப்பட்டியல் பேணப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்பு செயலாளர் பற்றி அந்த பெயர்ப்பட்டியல் பாதுகாப்பு அமைச்சின் கடடளையின்படி பேணப்பட வேண்டுமென்றும் இத்தால் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆறாவது பந்தி** - அணியும் ஒழுங்குவிதிகள் - பாராட்டு அணிவிப்பு மற்றும் பதக்கங்களை அணிய வேண்டிய ஒழுங்குமுறை உத்தியோகபூர்வ ஆவணத்தின்படி நீண்ட ஆயுதச்சேவைப் பதக்கத்திற்கு பின் இச் சேவைப் பதக்கத்தை அணிய வேண்டுமென்று கட்டளையிடப்படுகிறது.

**ஏழாவது பந்தி** - குறுகிய வடிவம் - பதக்கம் அணிபவர்களினால் சில சந்தர்ப்பங்களில் அணியப்படுவதும் சிறிய அளவிலான பதக்கம் எனக் குறிக்கப்படுகின்ற சிறிய அளவிலான பதக்கத்தின் அளவு வழங்கப்பட்டுள்ள பதக்கத்தின் அளவில் கிட்டிய அரைவாசியாக இருத்தல் வேண்டும். அச்சிறிய வடிவத்தின் இலச்சினை விடப்பட்ட மாதிரி ஒன்றை இராணுவ, கடற்படை, விமான படைகளின் மற்றும் பொலிஸ் தலைமையகத்தில் வைத்திருத்தல் வேண்டுமென கட்டளையிடப்படுகின்றது.

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களின் ஆணைப்படி,

உதய ஆர் செனவிரத்ன,
சனாதிபதியின் செயலாளர்.

திருத்தம்

**கௌரவ சேவைப் பதக்கம்**

2019, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதிய, 2112/32 ஆம் இலக்க, அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கௌரவ சேவைப் பதக்கத்திற்கான ஒழுங்குவிதிகளின் 1,4,6,8,9,13 மற்றும் 14 ஆம் பந்திகளை அகற்றி கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள புதிய 1,4,6,8,9,13 மற்றும் 14 ஆம் பந்திகளை உள்ளடக்குவதன் மூலம் இத்தால் திருத்தம் செய்யப்படுகின்றது.

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களின் ஆணைப்படி,

உதய ஆர் செனவிரத்ன,
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு,
2019, ஒற்றோபர் 16.

சேவாபிமானீ பதக்கம்

1. இரண்டாயிரத்தி ஒன்பதாம் ஆண்டு மே மாதம் பத்தொன்பதாம் திகதியிலிருந்து போருக்குப் பின்னரான செயற்பாடுகளுக்கு சேவை வழங்கிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் நடத்தை மற்றும் இருப்பைப் பற்றி 2009.05.19 ஆம் திகதியில் சேவையிலுள்ள மற்றும் அதற்குப் பின்னராக சேவையில் சேர்ந்த இராணுவ கடற்படை, விமானப்படைகளின் நிரந்தர மற்றும் தொண்டர் படைகளுடையவர்களுக்கும், இலங்கை பொலிஸ் சேவையில் உள்ள ஆரம்பப் பயிற்சியைத் தவிர ஆறு வருடங்களுக்கு கணிப்பீடு செய்யக்கூடிய எந்த தரத்தில் உள்ளவர்களுக்கு மற்றும் ஆயுதந் தாங்கிய படைகள் மற்றும் இலங்கை பொலிசுடன் இணைந்த நிறுவனங்களில் ஆறு வருடங்களுக்கு குறைந்த கணிப்பீட்டு சேவை காலம் உள்ள நிரந்தர சிவில் ஊழியர்களுக்கும் இப்பதக்கம் பெற தகுதியுள்ளது.

4. ஆயுதந் தாங்கிய படைகளின் அங்கத்தவர்களுக்காக சேவாபிமானீ பதக்கத்தை வழங்குவதற்கு செய்யக்கூடிய நிர்ணயங்களை ஆயுதச் சேவை தளபதியவர்களாலும் பொலிஸ் அங்கத்தவர்களுக்காக பொலிஸ் தளபதியினாலும் குறிப்பிடப்பட்ட குறைந்தது 3 பேர் இருக்கும் சபையினால் பரிந்துரைக்கப்பட வேண்டும். அந்த சபையினால் பரிந்துரைக்கப்பட்ட நிர்ணயங்களை அச் சேவைத் தளபதிகளின் அனுமதி பெற சமர்ப்பிக்கப்பட வேண்டும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் சம்பந்தமாக நிர்ணயங்கள் நேராக பாதுகாப்புச் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

6. பதக்கம் வழங்கிய நபர்களின் பெயர்கள், அந்தந்த சேவை ஆணைகளில் வெளியிடப்படும், அத்தகைய பெற்றோரின் பெயர்ப் பட்டியல் அந்த சேவைத் தளபதியின் கட்டளைப் படி பேணப்பட வேண்டும். இலங்கை பொலிஸ் அங்கத்தவர்களின் பெயர்ப் பதிவேடு பொலிஸ் மா அதிபரின் கட்டளைப்படி பேணப்பட வேண்டும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் சம்பந்தமாக அவ்வாறான பெயர்ப் பட்டியல் பாதுகாப்பு அமைச்சின் கட்டளையின் படி பேணப்பட வேண்டும்.

8. சேவைகளிருந்து விலக்கப்படுவர்கள் மற்றும் நீக்கப்படுவர்கள் அல்லது அதிகார சபையிலிருந்து விலக்குவதற்கு அல்லது ஓய்வுபெறுவதற்கு விதிக்கப்படும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் இதற்கு வேறான முறையில் கட்டளையிடப்படாமல் இருக்கும் வரை அவருக்கு வழங்கப்பட்டுள்ள பதக்கம் உரித்தானது.

9. அவமரியாதையோடு அல்லது அபகீர்த்திற்கு உள்ளாகி சேவையிலிருந்து விலக்கப்படும் இராணுவ உறுப்பினரொருவருக்கு அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் இதற்கு வேறான முறையில் கட்டளையிடும் வரை அவருக்கு வழங்கப்பட்ட பதக்கம் உரித்தானது.

13. பதக்கம் இழக்கப்பட்டு அதை மாற்றிக்கொள்ள விரும்பும்போது அத்தகைய பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும். சமாதான நீதவானால் சாட்சியமளிக்கப்பட்ட ஒரு அறிக்கை, இழப்பு ஏற்பட்ட சூழ்நிலைகளை சுட்டிக்காட்டி பொலிஸிற்கு செய்த முறைப்பாட்டுடன் கட்டளை அதிகாரிக்கு அனுப்பப்படும். அவரால் வழக்கமான சேவைத் தளபதிக்கு வழிகாட்டும் தகவல் தொடர்பு சேவைக்கு அனுப்பவும். இழப்புக்கான விளக்கம் திருப்திகரமாகக் கருதப்பட்டால் அங்கு இழந்த பதக்கம் கட்டணம் செலுத்தப்படும்.

14. ஒழுங்கு முறைகள்

| | | | |
|---|---|---|---|
| (அ) | "சேவைகள்" என்பது | - | இலங்கை இராணுவம்<br>இலங்கை கடற்படை<br>இலங்கை விமானப்படை |
| (ஆ) | "பொலிஸ்" என்பது | - | இலங்கை பொலிஸ் |
| (இ) | "சேவை தளபதிகள்" என்பது | - | இராணுவ தளபதி<br>கடற்படை தளபதி<br>விமானப்படை தளபதி |
| (ஈ) | "பொலிஸ் மா அதிபர்" என்பது | - | இலங்கை பொலிஸ்மா அதிபர் |
| (உ) | "இராணுவ நபர்கள்" என்பது | - | இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ் நபர்கள் |
| (ஊ) | "பொலிஸ் நபர்கள்" என்பது | - | ஏனைய பொலிஸ் நபர்கள் |
| (எ) | "சிவில் ஊழியர்" என்பது | - | இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் இலங்கை பொலிசுடன் தொடர்புடைய சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தர சிவில் ஊழியர்கள் |
| (ஏ) | "இலங்கை இராணுவம்" என்பது | - | இலங்கை இராணுவம் |
| (ஐ) | "கடற் படை" என்பது | - | இலங்கை கடற் படை |
| (ஒ) | "விமானப் படை" என்பது | - | இலங்கை விமானப் படை |
| (ஓ) | "பொலிஸ்" என்பது | - | இலங்கை பொலிஸ் |

திருத்தம்

**சேவைப் பதக்கம்**

கட்டளை

2019, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதிய, 2112/ 32 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சேவைப் பதக்கத்திற்கான ஒழுங்குவிதிகளின் இரண்டாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது பந்திகளை அகற்றி கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள படி திருத்தம் செய்யப்படுகின்றது.

**இரண்டாவது பந்தி** : விபரம் - உலோக தங்கரோஜா நிறத்தில் ஒரு பக்கத்தில் 2.2 செ.மீ. நீளமான நாற்கோணி வட்டமான சதுர கோணமாக அமைக்க வேண்டிய இப்பதக்கத்தின் முன்பக்கத்தில் நடுவில் குறுக்காக வைக்கப்பட்ட இரண்டு வாள் சின்னத்துடனும் மேல் நங்கூரமிட்டு அதில் சூழ சங்கிலியும் மேல் தலை இடது பக்கத்தின் திருப்பிய பறக்கும் கழுகும், சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளால் "சேவை பதக்கம்" என எழுதப்பட வேண்டும். பின் பக்கத்தில் தாமரை இதழில் கரையால் சூழப்பட்ட இலங்கை புராணக் கதைகளால் நிருபிக்கப்பட்ட சிங்கத்தின் ரூபமும் நெற்கதிர்களுடன் மற்றும் சிறந்த தர்ம சக்கரமும் அடியில் நிறைகுடமும் வலது பக்கத்தில் தொடர் வீசும் சூரியனும் இடது பக்கத்தில் சந்திரனும் உள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சின்னத்தையும், அதன் கீழ் தயாரிக்கப்பட்ட வருடமாக 2009 ஐயும் வரையப்பட வேண்டும்.

**நான்காவது பந்தி** : தகுதி 2019.05.19 ஆம் திகதியிலிருந்து போருக்குப் பின்னரான செயற்பாடுகளுக்காக சேவை வழங்கிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்புச் செயலாளருக்கு மற்றும் முதற் பயிற்சிக் காலம் தவிர மூன்று வருடங்களுக்கு குறைந்த கணிப்பீட்டுச் சேவை உள்ள நற்குணம் உள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இராணுவம், கடற்படை, விமானப் படைகளின் நிரந்தர மற்றும் தொண்டர் படைகளின் சகல பதவிகளுக்கும், இலங்கை பொலிஸ் அங்கத்தவர்களுக்கும் ஆயுதந் தாங்கிய படைகள் மற்றும் இலங்கை பொலிசுடன் இணைந்த நிறுவனங்களில் மூன்று வருட கூட்டுமொத்த சேவைக் காலத்தைக் கொண்ட நிரந்தர சிவில் ஊழியர்களுக்கும் கீழ் குறிப்பிடப்படும் சட்ட திட்டங்களின் கீழ் இந்தப் பதக்கம் வழங்கப்பட முடியுமென இத்தால் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஐந்தாவது பந்தி** : பதிவு செய்தல் - அதியுத்தமராம் சனாதிபதியவர்களின் ஆணைப்படி இந்தப் பதக்கம் வழங்கப்பட்ட சகலரினதும் பெயர், அந்தந்த சேவை ஆணைகளின் பிரசுரிக்கப்பட்ட வேண்டும். அந்த சேவைத்தளபதிகளின் கட்டளையின்படி அனைவரது பெயர்ப்பட்டியல் பேணப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்பு செயலாளர் பற்றி அந்த பெயர்ப்பட்டியல் பாதுகாப்பு அமைச்சின் கட்டளையின்படி பேணப்பட வேண்டுமென்றும் இத்தால் விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆறாவது பந்தி** : அணியும் ஒழுங்குவிதிகள் - பாராட்டு அணிவிப்பு மற்றும் பதக்கங்களை அணிய வேண்டிய ஒழுங்குமுறை உத்தியோகபூர்வ ஆவணத்தின்படி சேவாஅபிமானி பதக்கத்திற்கு பின் இச் சேவை பதக்கத்தை அணிய வேண்டுமென்று கட்டளையிடப்படுகின்றது.

**ஏழாவது பந்தி** : குறுகிய வடிவம் - பதக்கம் அணிபவர்களினால் சில சந்தர்ப்பங்களில் அணியப்படுவதும் சிறிய அளவிலான பதக்கம் எனக் குறிக்கப்படுகின்ற சிறிய அளவிலான பதக்கத்தின் அளவு வழங்கப்பட்டுள்ள பதக்கத்தின் அளவில் கிட்டிய அரைவாசியாக இருத்தல் வேண்டும். அச்சிறிய வடிவத்தின் இலச்சினை விடப்பட்ட மாதிரி ஒன்றை இராணுவ, கடற்படை, விமானப் படைகளின் மற்றும் பொலிஸ் தலைமையகத்தில் வைத்திருத்தல் வேண்டுமென கட்டளையிடப்படுகின்றது.

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களின் ஆணைப்படி,

உதய ஆர் செனவிரத்ன,
சனாதிபதியின் செயலாளர்.

திருத்தம்

**சேவைப் பதக்கம்**

*2019, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதிய, 2112/32 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கௌரவ சேவைப் பதக்கத்திற்கான ஒழுங்குவிதிகளின் 1,4,6,8,9,13 மற்றும் 14 ஆம் பந்திகளை அகற்றி கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள புதிய 1,4,6,8,9,13 மற்றும் 14 ஆம் பந்திகளை உள்ளடக்குவதன் மூலம் இத்தால் திருத்தம் செய்யப்படுகின்றது.*

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களின் ஆணைப்படி,*

*உதய ஆர் செனவிரத்ன,*
*சனாதிபதியின் செயலாளர்.*

*சனாதிபதி செயலகம்,*
*கொழும்பு,*
*2019, ஒற்றோபர் 16.*

சேவைப் பதக்கம்

1. *இரண்டாயிரத்தி ஒன்பதாம் ஆண்டு மே மாதம் பத்தொன்பதாம் திகதியிலிருந்து போருக்குப் பின்னரான செயற்பாடுகளுக்கு சேவை வழங்கிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் நடத்தை மற்றும் இருப்பையும் 2009.05.19 ஆம் திகதியில் சேவையிளுள்ள மற்றும் அதற்குப் பின்னராக சேவையில் சேர்ந்த இராணுவ, கடற்படை, விமானப் படைகளின் நிரந்தர மற்றும் தொண்டர் படைகளுடையவர்களுக்கும், இலங்கை பொலிஸ் சேவையில் உள்ள ஆரம்பப் பயிற்சியை தவிர ஆறு வருடங்களுக்கு கணிப்பீடு செய்யக்கூடிய எந்த தரத்தில் உள்ளவர்களுக்கு மற்றும் ஆயுதந் தாங்கிய படைகள் மற்றும் இலங்கை பொலிசுடன் இணைந்த நிறுவனங்களில் ஆறு வருடங்களுக்கு குறைந்த கணிப்பீட்டுச் சேவைக்காலம் உள்ள நிரந்தர சிவில் ஊழியர்களுக்கும் இப்பதக்கம் பெற தகுதியுள்ளது.*

4. *ஆயுதந் தாங்கிய படைகளின் அங்கத்தவர்களுக்காக சேவாபிமானீ பதக்கத்தை வழங்குவதற்கு செய்யக்கூடிய நிர்ணயங்களை ஆயுதச் சேவை தளபதியவர்களாலும் பொலிஸ் அங்கத்தவர்களுக்காக பொலிஸ் தளபதியினாலும் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தது 3 பேர் இருக்கும் குழுவினால் பரிந்துரைக்கப்பட வேண்டும். அந்தக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட நிர்ணயங்களை அச் சேவைத் தளபதிகளின் அனுமதி பெற சமர்ப்பிக்கப்பட வேண்டும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் சம்பந்தமாக நிர்ணயங்கள் நேராக பாதுகாப்புச் செயலாளரால் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.*

6. *பதக்கம் வழங்கிய நபர்களின் பெயர்கள், அந்த அந்த சேவை ஆணைகளில் வெளியிடப்படும், அத்தகைய பெற்றோரின் பெயர்ப் பட்டியல் அந்த சேவைத் தளபதியின் கட்டளைப் படி நடாத்தப்பட வேண்டும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் சம்பந்தமாக அவ்வாறான பெயர்ப் பட்டியல் பாதுகாப்பு அமைச்சின் கட்டளையின் படி நடாத்தப்பட வேண்டும்.*

8. *சேவைகளிலிருந்து விலக்கப்படுவர்கள் மற்றும் நீக்கப்படுவர்கள் அல்லது அதிகார சபையிலிருந்து விலகுவதற்கு அல்லது ஓய்வுபெறுவதற்கு விதிக்கப்படும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் இதற்கு வேறான முறையில் கட்டளையிடப்படாமல் இருக்கும் வரை அவருக்கு வழங்கப்பட்டுள்ள பதக்கம் உரித்தானது.*

9. *அவமரியாதையோடு அல்லது அபகீர்த்திக்கு உள்ளாகி சேவையிலிருந்து விலக்கப்படும் இராணுவ உறுப்பினரொருவருக்கு அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் இதற்கு வேறான முறையில் கட்டளையிடும் வரை அவருக்கு வழங்கப்பட்ட பதக்கம் உரித்தானது.*

13. *பதக்கம் இழக்கப்பட்டு அதை மாற்றிக்கொள்ள விரும்பும்போது அத்தகைய பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும். சமாதான நீதவான் ஒருவரினால் சாட்சியமளிக்கப்பட்ட ஒரு அறிக்கை, இழப்பு ஏற்பட்ட சூழ்நிலைகளை சுட்டிக்காட்டி பொலிஸுக்கு செய்த முறைப்பாடு கட்டளை அதிகாரிக்கு அனுப்பப்படும். அவரால் வழக்கமான சேவைத் தளபதிக்கு வழிகாட்டும் தகவல் தொடர்பு சேவைக்கு அனுப்பவும். இழப்புக்கான விளக்கம் திருப்திகரமாகக் கருதப்பட்டால் அங்கு இழந்த பதக்கத்திற்குப் பதிலாக புதிய பதக்கத்திற்கு கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.*

14. ஒழுங்கு முறைகள் -

| | | |
|---|---|---|
| (அ) “சேவைகள்" என்பது | - | இலங்கை இராணுவம்<br>இலங்கை கடற்படை<br>இலங்கை விமானப்படை |
| (ஆ) “பொலிஸ்” என்பது | - | இலங்கை பொலிஸ் |
| (இ) “சேவை தளபதிகள்” என்பது | - | இராணுவ தளபதி<br>கடற்படை தளபதி<br>விமானப்படை தளபதி |
| (ஈ) “பொலிஸ் மா அதிபர்” என்பது | - | இலங்கை பொலிஸ்மா அதிபர் |
| (உ) “இராணுவ நபர்கள்” என்பது | - | இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலிஸ் நபர்கள் |
| (ஊ) “பொலிஸ் நபர்கள்” என்பது | - | இலங்கை பொலிசின் எல்லா நபர்களையும் |
| (எ) “சிவில் ஊழியர்” என்பது | - | இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை இலங்கை பொலிசுடன் தொடர்புடைய சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தர சிவில் ஊழியர்கள் |
| (ஏ) “இராணுவம்” என்பது | - | இலங்கை இராணுவம் |
| (ஐ) “கடற் படை” என்பது | - | இலங்கை கடற் படை |
| (ஒ) “விமானப் படை” என்பது | - | இலங்கை விமானப் படை |
| (ஓ) “பொலிஸ்” என்பது | - | இலங்கை பொலிஸ் |

11-661/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.